**3.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்— 3க்குட்பட்ட வார்டு எண். 34 முத்தம்பாளையம் குளத்தில் தென்புறம் பொதுமக்கள் உபயோகிக்கும் வகையில் ரூ.7.60 லட்சம் மதிப்பீட்டில் பக்கச்சுவர்கள் மற்றும் கான்கீரிட் பேவர்பிளாக் கற்கள் கொண்டு நடைபாதை அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததார் திரு. எம். போஜராஜன் அவர்களுக்கு 21/01/2018—ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணியை மாநகராட்சி நிதி நிலைமை மற்றும் நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு பணிதளம் ஒப்படைக்கப்படாத காரணத்தால் பணி

மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டது. ஒப்பந்த காலகெடுவிற்குள் பணிதளம் ஒப்படைக்கப்படாத காரணத்தினாலும், பொதுப்பணித்துறையினரால் வெளியிடப்படும் தரப்படுத்தப்பட்ட விலைப்புள்ளி பட்டியல் இரண்டு முறை விலைவிகிதம் உயர்த்தப்பட்டதாலும் ஒப்பந்ததாரருக்கு இழப்பு ஏற்படும் என ஒப்பந்ததாரர் திரு. எம். போஜராஜன் அவர்கள் மேற்படி பணி ஒப்பந்தத்தை ரத்து செய்து முன்வைப்பு தொகையை திருப்பி வழங்க கோரியுள்ளார்.

மாநகராட்சி நிதிநிலையை கருத்தில் கொண்டும், வேலை உத்திரவு வழங்கி இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டதால், ஒப்பந்ததார் திரு. எம். போஜராஜன் அவர்களின் வேலை உத்திரவை ரத்து செய்யவும் அன்னார் செலுத்தியுள்ள முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ2/6318/2017

**108.** அனுமதிக்கப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டம்- கழிவு நீருந்து நிலையம்- லிப்டிங் ஸ்டேசன் LS 10 ஜெய் பாலாஜி நகரில் அமைந்துள்ளது. மேற்கண்ட லிப்டிங் ஸ்டேசனிற்கு லட்சுமி நகர், கோணவாய்க்கால், வெண்டிபாளையம் ஆகிய பகுதிகளில் வீடுகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருவதால் அதிக அளவில் கழிவு நீர் வந்தடைகிறது. எனவே மேற்கண்ட லிப்டிங் ஸ்டேசனில் உள்ள மோட்டார், ஸ்டார்ட்டர்கள், மற்றும் பம்புகளில் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கழிவுநீர் பம்பிங் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே மோட்டார், மற்றும் பம்புகள் பழுதுகளை சரி செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணியை சுகாதார அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசகிப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்கள். லாவண்யா எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. ரூ.1,89,246/-ஐ திருவாளர்கள். லாவண்யா எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ4/1973/2020

**109.** பதிவு செய்யப்பட்டது.

5. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2-க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் 30 நாட்களுக்கு மத்திய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் தற்காலிக காய்கறி மார்க்கெட்டில் சமூக இடைவெளி பராமரிக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் கைகளை சுத்தப்படுத்தி கொள்ளவும் 5 இடங்களில் எவர்சில்வர் அமைப்பிலான கைகளுவும் அமைப்பு அமைக்கவும் மற்றும் காய்கறி கடைக்கு வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் வண்டி வாகனங்கள் தனித்தனியாக செல்லும் வகையில் இரும்பு கம்பி தடுப்புகள் அமைத்தல் ஆகிய வசதிகளை வாடகை அடிப்படையில் அமைத்து கொடுக்க வேண்டியதன் அவசரம் அவசியம் கருதி

மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,96,473/-ஐ திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் : E1/582/2020

**110. பதிவு செய்யப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு கிருமி நாசினி (Antimicrobial/Sanitizers) கொள்முதல் செய்யும் பணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் 04.06.2020ஆம் தேதியன்று வரப்பெற்றது.

| வ. எண் | பொருளின் பெயர் | எண்ணிக்கை / அளவு | | ஒப்பந்ததாரர்கள்/ நிறுவனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒன்று | மொத்தம் | M/S. கார்டியன் ஹெல்த் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட் | | M/S. சரவணா கெம் டைஸ் | | M/S. வீனஸ் டைஸ் கெமிக்கல்ஸ் | |
| | | | | விலை விபரம் | | விலை விபரம் | | விலை விபரம் | |
| 1. | கிருமி நாசினி (Antimicrobial/ Sanitizers) | 1 லிட்டர் | 50 லிட்டர் | 9440 | 4,72,000 | 10,030 | 5,01,500 | 10,620 | 5,31,000 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு அதில் குறைவாக மொத்த செலவினம் ரூ.4,72,000/= கொடுத்துள்ள M/S. கார்டியன் ஹெல்த் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடைதாக உள்ளதால், அதனை ஏற்று மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ளவும். மேற்படி செலவினத்தை கொரோனா வைரஸ் நிவாரண நிதியின் CSR நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/2194–2/2020)

**111. பதிவு செய்யப்பட்டது.**

**7.**ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் Smart City Added Areas (Phase II) பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் (மதிப்பீடு ரூ. 42.00 கோடி) ஆரம்பிக்கப்பட உள்ளது. இப்பணிக்குத் தேவையான வரைபடங்கள் Auto cad Drawings மற்றும் Book Lets போட்டோ நகல்கள் தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் சில்லறைச் செலவினங்கள் (Contingencies) மேற்கொள்ள மதிப்பீட்டில் ரூ.39.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே ஒரு ஆண்டு காலத்திற்கு இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு பொது நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம். (E1/**7737**/UGSS/**2019)**

**112. அனுமதிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள் ரூ.9,74,308/-ஐ, மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திரு. கே.எம்.ராமசாமி என்ஜினியரிங் காண்டிராக்டர் அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | RF-Vol-VI | 2012-2013 | 32 | 16,000.00 |
| 2. | RF-Vol-VI | 2012-2013 | 34 | 12,500.00 |
| 3. | RF-Vol-VI | 2012-2013 | 35 | 11,228.00 |
| 4. | RF-Vol-VI | 2012-2013 | 34 | 20,000.00 |
| 5. | RF-Vol-VI | 2012-2013 | 36 | 20,796.00 |
| 6. | RF-Vol-VI | 2012-2013 | 35 | 48,276.00 |
| 7. | RF-Vol-VI | 2012-2013 | 35 | 49,700.00 |
| 8. | RF-Vol-VI | 2012-2013 | 36 | 10,362.00 |
| 9. | RF-Vol-VI | 2012-2013 | 40 | 39,700.00 |
| 10. | RF-Vol-VI | 2013-2014 | 41 | 39,589.00 |
| 11. | RF-Vol-VI | 2012-2013 | 41 | 21,675.00 |
| 12. | RF-Vol-VI | 2013-2014 | 40 | 21,000.00 |
| 13. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,500.00 |
| 14. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,750.00 |
| 15. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,500.00 |
| 16. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,750.00 |
| 17. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 4,000.00 |
| 18. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,750.00 |
| 19. | RF-Vol-VI | 2013-2014 | 42 | 3,500.00 |
| 20. | RF-Vol-VII | 2013-2014 | 9 | 78,250.00 |
| 21. | RF-Vol-VII | 2013-2014 | 12 | 79,480.00 |
| 22. | RF-Vol-VII | 2013-2014 | 9 | 70,500.00 |
| 23. | RF-Vol-VII | 2013-2014 | 12 | 73,026.00 |
| 24. | RF-Vol-VII | 2013-2014 | 9 | 76,500.00 |
| 25. | RF-Vol-VII | 2013-2014 | 12 | 78,406.00 |
| 26. | RF-Vol-VII | 2013-2014 | 9 | 71,500.00 |
| 27. | RF-Vol-VII | 2013-2014 | 12 | 74,070.00 |
| 28. | RF-Vol-VII | 2013-2014 | 8 | 36,000.00 |
| | | | Total | **9,74,308.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.9,74,308/-யை திரு. கே.எம்.ராமசாமி என்ஜினியரிங் காண்டிராக்டர் அவர்களுக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி வைப்புத் தொகை ரூ.9,74,308/- ஐ திரு. கே.எம்.ராமசாமி அவர்களுக்கு திருப்பி வழங்க அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். பி3/3421/2017

**113.** அனுமதிக்கப்பட்டது.

**9.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட காளை மாட்டு சிலை அருகே அமைந்துள்ள ஆணையர், பொறியர் மற்றும் நகர்நல அலுவலர் அவர்களின் குடியிருப்பு மற்றும் சத்துணவு கூடம் வளாகத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய வணிக வளாகம் கட்டும் பணி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, இடித்து அப்புறப்படுத்தயுள்ள கட்டிடத்தில் உள்ள ஜாமான்கள், கதவு, ஜன்னல், கா்டர், சேனல், இரும்பு கம்பி ஆகியவை மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

எனவே, பயன்பாடற்ற மேற்கண்ட பழைய பொருள்களை கழிவு செய்ய வேண்டியுள்ளது. ஆகவே கிடங்கில் உள்ள **4260** கிலோ தோராய எடை கொண்ட பழைய பொருட்களின் உத்தேச மதிப்பு மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.**78,000/–** ஆகும். மேற்கண்ட பழைய பொருட்களை பொது ஏலம் மூலம் கழிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி இடத்தில் அமையப்பெறவுள்ள கட்டிடப் பணி சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசர அவசியத்தினை கருதி, ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இடையூறாக உள்ள மரங்களை உள்ளது உள்ளபடி பொது ஏலத்தில் விடுவதற்கு அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/650/2020

**114.** அனுமதிக்கப்பட்டது.

10. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட காளைமாடுசிலை அருகே உள்ள பழைய ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள **4260** கிலோ தோராய எடை கொண்ட பயன்பாடற்ற பழைய பொருள்களை கழிவு செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 19.05.2020-ஆம் தேதிய முன் அனுமதியின் பேரில் 17.06.2020-ஆம் தேதியன்று ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்க்கண்ட ஏலதாரா்கள். முன்வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டனர் அதன் விபரம் பின்வருமாறு:-

| **வ.எண்.** | **ஏலதாரரின் பெயர்** | **வைப்புத்தொகை** | **கோரிய உச்ச கேள்வித்தொகை** |
|---|---|---|---|
| 1 | திரு.ஏ. செல்வராஜ்,<br>**101**, அமராவதி நகர்,<br>ஆர்.என்.புதூர், | ரூ.5000/- | ரூ.**80,250/–** |

| | | | |
|---|---|---|---|
| | ஈரோடு –5. | | |
| 2 | திரு.என். ரஞ்சித்குமார்,<br>90, மாரியம்மன் கோயில் வீதி,<br>குமலன் குட்டை,<br>ஈரோடு–11 | ரூ.5000/ | ரூ.80,300/– |
| 3 | கே. மாதேஸ்வரன்,<br>2/39, சிதம்பரனார் வீதி,<br>வீரப்பன் சத்திரம்,<br>ஈரோடு–4 | ரூ.5000/ | ரூ.80,500/– |

மேற்கண்ட விபரப்படி ஏலத்தில் கலந்துக்கொண்ட ஏலதாரர்களில் மொத்தம் ரூ.80500.00/-க்கு திரு.கே.மாதேஸ்வரன், ஈரோடு அவர்கள் கோரியுள்ள உச்ச கேள்வித்தொகை உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்,
2. பழைய ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் புதிய வணிக வளாகம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பணியின் அவசர அவசியம் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்களின் முன் அனுமதியை பெற்று பழைய பொருட்களை அப்புறப்படுத்தவதற்கு அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/650/2020

**115. அனுமதிக்கப்பட்டது.**

11. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.50 காந்திஜி சாலை ஆணையர் மற்றும் பொறியாளர் பழுதடைந்த குடியிருப்புக் கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டிடங்கள் (வணிக வளாக கட்டிடங்கள்) Smart city திட்டத்தின் கீழ் கட்ட இடையூறாக உள்ள மரங்களை அகற்ற அனுமதி கோரியது தொடர்பாக மரமதிப்பு நிர்ணயம் செய்த வரப்பெற்ற ஈரோடு வட்டாட்சியரின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது.

மேற்படி காலையில் புதிய கட்டிட பணி மேற்கொள்ள இடையூறாக தென்னை மரங்கள்–7, வேப்ப மரங்கள் –7, வாதனாமரங்கள் –4, சைகை மரம்–1, இலுப்பை மரம்–1 மற்றும் நாவல் பழம் மரம்–1 ஆக மொத்தம் 21 மரங்கள் உள்ளன. இவற்றில் சைகை மரம்–1 பட்டுப்போன நிலையில் உள்ளது. புதிய கட்டிட பணிகள் மேற்கொள்ள மேற்படி 21 மரங்களும் இடையூறாக உள்ளதால் அகற்ற வேண்டிய நிலையில் உள்ளன.

மேற்படி நகர அளவை எண்.54–ல் அமைந்திருக்கும் மரங்களின் அமைப்பும், மொத்த மரங்களின் அரசு மதிப்பு ரூ. 19,100/–என மதிப்பீடு செய்யப்பட்டு ஈரோடு வட்டாட்சியரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையின் விபரம்

**ஏலம் விடப்படும் பொருள்கள்**

| வ.எண். | மரம் எண். | மரத்தின் பெயர் | அகலம் (மீ) | உயரம் (அடி) | அரசு மதிப்பு தொகை | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | V1 | வேப்பமரம் | 1.40 | 35 | 1000 | ரூ.5000/– |
| 2 | V2 | வேப்பமரம் | 1.20 | 30 | 1000 | |
| 3 | V3 | வேப்பமரம் | 1.10 | 32 | 500 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | V4 | வேப்பமரம் | 1.05 | 37 | 500 | |
| 5 | V5 | வேப்பமரம் | 1.50 | 31 | 1000 | |
| 6 | V6 | வேப்பமரம் | 1.25 | 30 | 500 | |
| 7 | V7 | வேப்பமரம் | 1.70 | 42 | 1000 | |
| 8 | T1 | தென்னைமரம் | 1.10 | 55 | 300 | |
| 9 | T2 | தென்னைமரம் | 1.05 | 57 | 300 | |
| 10 | T3 | தென்னைமரம் | 1.00 | 60 | 300 | |
| 11 | T4 | தென்னைமரம் | 0.80 | 40 | 300 | |
| 12 | T5 | தென்னைமரம் | 0.95 | 55 | 300 | |
| 13 | T6 | தென்னைமரம் | 0.75 | 35 | 300 | |
| 14 | T7 | தென்னைமரம் | 1.60 | 30 | 300 | |
| 15 | S1 | சைகை மரம் | 2.25 | 40 | 4000 | |
| 16 | E1 | இலுப்பை மரம் | 2.40 | 45 | 1000 | |
| 17 | N1 | நாவல் பழம் மரம் | 2.60 | 46 | 4000 | |
| 18 | VA1 | வாதனா மரம் | 1.50 | 42 | 1000 | |
| 19 | VA2 | வாதனா மரம் | 2.20 | 15 | 500 | |
| 20 | VA3 | வாதனா மரம் | 1.90 | 20 | 500 | |
| 21 | VA4 | வாதனா மரம் | 1.60 | 20 | 500 | |
| | | | | | 19100 | |

மேற்கண்ட மரங்களை உள்ளது உள்ளபடி பொது ஏலத்தில் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி இடத்தில் அமையப்பபெறவுள்ள கட்டிடப் பணி சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசர அவசியத்தினை கருதி, ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இடையூறாக உள்ள மரங்களை உள்ளது உள்ளபடி பொது ஏலத்தில் விடுவதற்கு அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/650/2020-1

**116. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–4 வார்டு எண்.50 காந்திஜி சாலை ஆணையர் மற்றும் பொறியாளர் பழுதடைந்த குடியிருப்புக் கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு இடையூறாக உள்ள மரங்கள் உள்ளது உள்ளபடி மாநகராட்சி அலுவலகத்தில் பொது ஏலம் விடுதல் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 12.06.2020-ஆம் தேதிய முன் அனுமதியின் பேரில் 22.06.2020-ஆம் தேதியன்று ஏலம்

நடத்தப்பட்டதில் கீழ்க்கண்ட ஏலதாரர்கள் முன்வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டனர் அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | வைப்புத்தொகை | கோரிய உச்ச கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.சென்னியப்பன்<br>த/பெ. மாரிமுத்து,<br>266, சத்யா நகர்,<br>ரங்கம்பாளையம் (அஞ்சல்),<br>ஈரோடு–9. | ரூ.5000/- | ரூ.22,000/– |
| 2 | திரு.பி. சத்தியநாராயணன்,<br>510, E.M.H. மெயின் வீதி,<br>0சென்னிமலை ரோடு,<br>ஈரோடு – 2. | ரூ.5000/ | ரூ.21,500/– |
| 3 | திரு. பழனிசாமி,<br>காத்தா வலசு,<br>பி. மேட்டுப்பாளையம்<br>(அஞ்சல்)<br>வெள்ளோடு,<br>ஈரோடு. | ரூ.5000/ | ரூ.21,900/– |

மேற்கண்ட விபரப்படி ஏலத்தில் கலந்துக்கொண்ட ஏலதாரர்களில் மொத்தம் ரூ.22000.00/-க்கு திரு.சென்னியப்பன், ஈரோடு அவர்கள் கோரியுள்ள உச்ச கேள்வித்தொகை உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்,
2. ஆணையர் மற்றும் பொறியாளர் பழுதடைந்த குடியிருப்புக் கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டிடங்கள் கட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பணியின் அவசர அவசியம் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்களின் முன் அனுமதியை பெற்று மரங்களை அப்புறப்படுத்தவதற்கு அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/650/2020-1

**117. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சியில் Additional Infrastructure work to Zone-4 area MCC plant at Muthusamy colony in W.No.46, S.T.P.Site, Vendipalayam compost yard site and Burial ground campus in W.No.60 பணியினை ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.03.2020 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 16.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) M/s. RK ENVIRO CARE | (-) 0.15 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) M/s. C.PONNUSAMY & CO | (+) 3.48 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட |

| | |
|---|---|
| | மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்தாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.15 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s. RK ENVIRO CARE நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

01. அனுமதிக்கலாம்.
02. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. RK ENVIRO CARE நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/1836/2020.

**118. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சியில் Supply & Fixing of shredding machine at Karuvilparai valasu MCC and Aluminium turbo air ventilator, RO system, steel floor matt, GI man holes at muthampalayam phase 2 & 4, karuvilparai valasu, kamaraj nagar, jeeva nagar, nethaji nagar and therkupallam MCC பணியினை ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 25.02.2020 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 31.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. அதனைத் தொடர்ந்து 16.06.2020 அன்று இரண்டாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) M/s.C.PONNUSAMY & CO | (-) 0.09 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) M/s.PK ASSOCIATES | (+) 5.45 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்தாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வ

ரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.09 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.C.PONNUSAMY & CO நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். C.PONNUSAMY & CO நிறுவனத்தாரின ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/1188/2020.

**119. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

15. ஈரோடு மாநகராட்சி மண்டலம்- 3க்குட்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வார்டு எண்.31 சாமுண்டி நகர், மாருதி நகர், ஜெய் கிருஷ்ணா கார்டன், சன் கார்டன், செந்தமிழ் நகர். வார்டு எண். 34 லட்சுமி கார்டன், உதயம் கார்டன். வார்டு எண். 36 சேரன் நகர். வார்டு எண். 37 முத்தம்பாளையம் பகுதி-3 மற்றும் வார்டு எண்.44

பெரியார் நகர் ஆகிய 10 இடங்களில் பூங்கா அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.735 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.19884/2018/1HSDTP-3-6/18-7-18ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 25477/2018/DO-1ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். பாலாஜி கன்ஸ்ட்ரக்ஷன், ஈரோடு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி திட்டப்பணிகள் மேற்கொள்ளும் போது பூங்காக்களில் பணிக்களத்திற்கேற்ப சில புதிய இனங்களும் மற்றும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியில் புதிய இனங்கள் மேற்கொண்டமைக்கும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாக மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே ஒப்புதல் வழங்கப்பட்ட இனங்களில் கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு தயார் செய்யப்பட்டுள்ள பணி அறிக்கைத்தாளுக்கு (Work slip) தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் உரிய ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.இ1/444/2020

**120. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

16. ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2-க்குட்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டம் 2017-18-ன் கீழ் வார்டு எண்.17 வி.ஜி.பி.கார்டன் (S.F.No.123/1), பாலாஜி நகர் (S.F.No.14/2A2,3A2&15/1A1),அர்ஜீனா நகர் (S.F.No.36/1A,36/1,36/2A1,36/3A2) வார்டு எண். 18 காமதேனு நகர் (S.F.No.B1, B2,434), பாரதியார் நகர் (S.F.No.414/3,5,6,7,8). வார்டு எண். 21 டெலிபோன் நகர் ( S.F.No.314/94). வார்டு எண். 22 சம்பத் நகர் ( நூலகம் எதிரில்) (S.F.No.405/1 பார்ட் & 405/3 பார்ட்), சம்பத் நகர் நடுவில் உள்ள E மற்றும் D பிளாட்ஸ் (S.F.No.405/406) வார்டு எண்:25 முனிசிபல் காலனி (மேயர் குடியிருப்பு அருகில்) ஆகிய 9 இடங்களில் பூங்கா அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.465 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ந.க.எண். 19884/2018/1HSDP-3-1 நாள்:18.07.2018-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 25477/2017/DO-1 நாள்:23.08.2018-ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.எஸ்.ஆர்.கே கன்ஸ்ட்ரக்ஸ்சன், ஈரோடு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி திட்டப்பணிகள் மேற்கொள்ளும் போது பூங்காக்களில் பணிக்களத்திற்கேற்ப சில புதிய இனங்களும் மற்றும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியில் புதிய இனங்கள் மேற்கொண்டமைக்கும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாக மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே ஒப்புதல் வழங்கப்பட்ட இனங்களில் கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு தயார் செய்யப்பட்டுள்ள பணி அறிக்கைத்தாளுக்கு (Work slip) தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் உரிய ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u> :-**

01. அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/444/2018

**121. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

17. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்: 28-ல் வ.உ.சி மைதானத்தில் அமையவுள்ள மார்க்கெட்டில் 176 கடைகளுக்கு தேவையான மின்சார வசதி செய்து தருதல் தொடர்பான பணி) பணியினை ரூ.13.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 26.05.2020 அன்று மாமன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 09.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திரு. K.N.Prasanna | (-) 0.10 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். King Construction | (+) 0.42 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.10 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. K.N.Prasanna அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. K.N.Prasanna அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0649/2020.

**122. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

18. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்: 28-ல் வ.உ.சி மைதானத்தில் அமையவுள்ள மார்க்கெட்டில் 224 கடைகளுக்கு தேவையான மின்சார வசதி செய்து தருதல் தொடர்பான பணி) பணியினை ரூ.13.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 26.05.2020 அன்று மாமன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 09.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திரு. K.Nandhakumar | (-) 0.09 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திரு. K.Muthusamy | (+) 0.28 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.09 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம்

அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. K.Nandhakumar அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.K.Nandhakumar அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0650/2020.

**123. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

19. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்: 28-ல் வ.உ.சி மைதானத்தில் இரும்பு சீட் உறையினால் காய்கறி கடைகள் அமைக்கும் பணி (பிளாக்-1 144 கடைகள் மற்றும் வாழைப்பழமண்டி 25 கடைகள்) பணியினை ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.05.2020 அன்று மாமன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 29.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். ஏ.ஆர்.கே கன்ஸ்ட்ரக்சன் | (-)0.05 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருமதி. கே.அமுதா | (+)0.17 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.05 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். ஏ.ஆர்.கே கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். ஏ.ஆர்.கே கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0637/2020-1.

**124. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

20. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்: 28-ல் வ.உ.சி மைதானத்தில் இரும்பு சீட் உறையினால் காய்கறி கடைகள் அமைக்கும் பணி (பிளாக்-2 132 கடைகள் மற்றும் வெங்காயம் மண்டி 14 கடைகள்) பணியினை ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.05.2020 அன்று மாமன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 29.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். வெற்றி கன்ஸ்ட்ரக்சன் | (-)0.05 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் | (+)3.59 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.05 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். வெற்றி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். வெற்றி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0637/2020-2.

**125. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

21. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்: 28-ல் வ.உ.சி மைதானத்தில் இரும்பு சீட் உறையினால் காய்கறி கடைகள் அமைக்கும் பணி (பிளாக்-3 122 கடைகள் மற்றும் பழகடைகள் 35 கடைகள்) பணியினை ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.05.2020 அன்று மாமன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திரு. கே. முத்துசாமி | (-)0.08 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திரு. கே. நந்தகுமார் | (+)0.68 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.08 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. கே. முத்துசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. கே. முத்துசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0637/2020-3.

**126. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**22.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்:16 மேட்டையன் காடு ஊர்பகுதி மற்றும் தெற்கு பகுதி ( கால்நடை மருத்துவமனை) மற்றும் வார்டு எண்:20 பெரியவலசு இரட்டை பிள்ளையார் கோவில் வீதி (கொத்துகாரர் வீதி, சானங்காடு) ஆகிய பகுதிகளில்

ஏற்கனவே இருந்த 2” குழாய் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிகளுக்கு சேதமடைந்த குழாய்களுக்கு பதிலாக புதிய 2” குழாய் பதித்து குடிநீர் வசதி செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.சி.சாமியப்பன்,ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,40,108/-ஐ திரு.சி.சாமியப்பன்,ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(E2/608/2020)**

**127. பதிவு செய்யப்பட்டது.**

**23.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகத்தில் பொறியர் பிரிவில் செயல்படுத்தப்படும் திட்ட பணிகள் அலுவலகம் சம்பந்தமான பணிகளை மேற்கொள்ள UPS வசதியுடன் கூடிய கணிணி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த Inverter and Batterys பொருத்தப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிறது. தற்போது Inverter and Batterys பழுதடைந்து இயங்காமல் உள்ளது. இதனால் கணிணி இயக்கமுடியாமல் பொறியர் பிரிவு பணிகள் மற்றும் இதர அலுவலக சம்பந்தமான பணிகள் மற்றும் நகல் எடுக்கும் பணிகள் அனைத்தும் மேற்கொள்ள இயலவில்லை. எனவே மேற்கண்ட Inverter and Battery யை மாற்றி, புதியதாக Inverter and Battery வாங்கி பொருத்த ஆகும் செலவினத்தொகை ரூ.96,000/—க்கு 05.03.2020—ல் ஆணையர் அனுமதி பெறப்பட்டு, பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15— ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். கிரீன் என்விரோ சிஸ்டம்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.95,500/—ஐ திருவாளர். கிரீன் என்விரோ சிஸ்டம்ஸ், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(E2/0560 /2020)**

**128. பதிவு செய்யப்பட்டது.**

24. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு 35- இந்திராகாந்தி வீதி-நல்லிபாளையம் சாலை ஓடைமேடு பகுதியில் ஓடை அமைந்துள்ளது. 11.04.2020 அன்று பெய்த கனமழையில் ஓடையில் அதிகப்படியான மழைநீர் வந்ததால் ஓடையின் இருபுறமும் உள்ள குடியிருப்பு பகுதியில் மழைநீர் உட்புகுந்து பொது மக்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. மேற்படி பகுதியின் ஓடையில் புதர்மண்டியும் அதிகப்படியான சேறுசகதிகள், முட்புதர்கள் இருந்த காரணத்தினால் வெள்ள நீரோட்டம் தடைப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. எனவே எதிர்வரும் மழை காலத்தை கருத்தில் கொண்டு மழைநீர் ஓடையில் சீராக செல்ல ஏதுவாக சகதியுடன் கூடிய மண் மற்றும் புதர்களை உடனடியாக அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பணியை் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார்

ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 45,931/-ஐ திரு. K. நந்தகுமார் ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(E1/1972/2020)**

**129. பதிவு செய்யப்பட்டது.**

25. ஈரோடு மாநகராட்சி மண்டலம்2-க்குட்பட்ட பெரியசேமூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மல்லிகை நகர் நீர் உந்து நிலையத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யும் 300mm AC மெயின் குழாயில் பி.பி.அக்ரஹாரம், நஞ்சப்பா நகர் மற்றும் பிச்சைக்காரன் பள்ளம் ஓடை திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. இதனால் இக்குழாய் மூலம் தண்ணீர் வசதி பெறும் வார்டு எண்: 17,18,19 மற்றும் மண்டலம்-1 வார்டு எண்:8 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்க இயலவில்லை. எனவே, உடனடியாக உடைப்பை சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.சி.சாமியப்பன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.39,237/-ஐ திரு.சி.சாமியப்பன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(E2/702/2020)

**130. பதிவு செய்யப்பட்டது.**

26. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் மேற்கு தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20 ன் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு ந.க.எண்: 2146/2019/அ3 நாள்: 19.02.2020-ம் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் /தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்:18 S.S.B நகரில் நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத்தொகை ரூ.16.50/- லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 02.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். P.T.K.Construction | (-) 0.08 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2)திருவாளர்.Annaiyan Construction | (+) 0.37 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.03 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.P.T.K.Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

01. அனுமதிக்கலாம்.
02. மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். P.T.K.Constructions நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/0125/2020.

**131. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

27. ஈரோடு மாநகராட்சி மண்டலம்- 3க்குட்பட்ட பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் நீர்நிலைகளை பாதுகாத்து மேம்பாடு செய்தல் பணிக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை சார்பாக 2016-17ன் கீழ் வார்டு எண்.34 முத்தம்பாளையம் குளம் தூர் வாரி நீர்வரத்து வாய்க்கால் மேம்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.275 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண். 1704/2016/அ11 நாள்.28-12-2016ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2829/2016/DO-2 நாள்.30-01-2017ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். எம்.போஜராஜன், ஈரோடு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி குளம் தூர் வாரும் பணி மேற்கொள்ளும் போது பணிக்களத்திற்கேற்ப சில புதிய இனங்களும் மற்றும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியில் புதிய இனங்கள் மேற்கொண்டமைக்கும் சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாக மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே ஒப்புதல் வழங்கப்பட்ட இனங்களில் கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு தயார் செய்யப்பட்டுள்ள பணி அறிக்கைத்தாளுக்கு (Work slip) தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் உரிய ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/3991/2020

**132. அ.கு அனுமதிக்கப்பட்டது.**